# පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 450
# பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 450
# Parliamentary Series No. 450

**ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ දසවැනි පාර්ලිමේන්තුව**

**(පළමුවැනි සභාවාරය)**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பத்தாவது பாராளுமன்றம்

(முதலாவது கூட்டத்தொடர்)

The Tenth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka

(First Session)

# ස්ථාවර නියෝග පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව
# நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கை
# REPORT OF THE COMMITTEE ON STANDING ORDERS

**ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ දසවැනි පාර්ලිමේන්තුව**
**(පළමුවැනි සභාවාරය)**

## පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 450

# ස්ථාවර නියෝග පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව

**කාරක සභාවේ සභාපති**
**කථානායක, ගරු (වෛද්‍ය) ජගත් වික්‍රමරත්න මහතා**
විසින් ඉදිරිපත් කරන ලදී.

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව මගින් 2026 පෙබරවාරි 20 වැනි දින
මුද්‍රණය කිරීමට නියෝග කරන ලදී.

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුවේ මුද්‍රණය කෙරිණි.
කොළඹ රජයේ ප්‍රකාශන කාර්යාංශයෙන් මිලදී ගත හැක.

# වාර්තාව

දසවැනි පාර්ලිමේන්තුවේ පළමුවැනි සභාවාරයේදී, 2025 ඔක්තෝබර් 10 වැනි දින ප්‍රථම වරට රැස්වූ කාරක සභාව, පිළිවෙළින් 2025 සැප්තැම්බර් 26 සහ ඔක්තෝබර් 07 දිනයන්හි පාර්ලිමේන්තුවේ ස්ථාවර නියෝග (ස්.නි.) සංශෝධනය කිරීම සම්බන්ධයෙන් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද යෝජනා පදනම් කර ගනිමින්, ප්‍රධාන වශයෙන් පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව (ස්.නි. 120) සහ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව (ස්.නි. 119) සම්බන්ධයෙන් වන ස්ථාවර නියෝග සංශෝධන (ඇමුණුම 1 හා ඇමුණුම 11 වශයෙන්) මෙම වාර්තාව මගින් ඉදිරිපත් කරයි.

කාලීන අවශ්‍යතාවයන් වැඩිදුරටත් සලකා බලමින් ඉහත විශේෂ කාර්යයන් සඳහා වන කාරක සභාවන්හි මූලික අරමුණු වඩාත් කාර්යක්ෂම සහ ඵලදායි අන්දමින් සාක්ෂාත් කර ගැනීම සඳහා එහි විමර්ශන කටයුතුවල සඵලතාවය වැදගත්වන හෙයින් ඒ සඳහා ගත වන කාලය අවම කර ගැනීම මෙන්ම බරපතල මූල්‍ය වංචා, දූෂණ හෝ මහජන මුදල් නාස්තිය සිදුවී ඇති බවට කාරක සභාව මගින් හඳුනා ගෙන ඇති සිද්ධීන් ඍජුවම විමර්ශන ආයතන වෙත යොමු කිරීමේ හැකියාව අපේක්ෂා කිරීම සහ අදාළ ආයතනවලට සම්පූර්ණ, අවශ්‍ය කඩිනම් විමර්ශනයක් පැවැත්වීමට ඉඩ සැලසීම යනාදී කරුණු මෙම සංශෝධන ඉදිරිපත් කිරීමේ මූලික අභිලාෂයන් වේ.

2025 ඔක්තෝබර් 10 වැනි දින රැස් වූ කාරක සභාව විසින් මෙම යෝජිත සංශෝධන, තවදුරටත් සංශෝධන සහිතව අනුමත කරන ලද අතර, 2025 දෙසැම්බර් 18 සහ 2026 පෙබරවාරි 17 දිනයන්හි නැවත රැස්වූ කාරක සභාව 2026 පෙබරවාරි 20 වැනි දින කාරක සභාවේ වාර්තාව කාරක සභාවේ සභාපති කථානායක ගරු (වෛද්‍ය) ජගත් වික්‍රමරත්න මහතා විසින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීමට තීරණය කරන ලදී.

2. දසවැනි පාර්ලිමේන්තුවේ පළමුවැනි සභාවාරය සඳහා වූ ස්ථාවර නියෝග පිළිබඳ කාරක සභාවේ සංයුතිය

ගරු (වෛද්‍ය) ජගත් වික්‍රමරත්න මහතා, කථානායක **(සභාපති)**
ගරු (වෛද්‍ය) රිස්වි සාලි මහතා, නියෝජ්‍ය කථානායක සහ කාරක සභා සභාපති
ගරු හේමාලි වීරසේකර මහත්මිය, නියෝජ්‍ය කාරක සභා සභාපතිනි
ගරු (වෛද්‍ය) නලින්ද ජයතිස්ස මහතා
ගරු අනුර කරුණාතිලක මහතා
ගරු (වෛද්‍ය) ප්‍රසන්න ගුණසේන මහතා
ගරු (ආචාර්ය) කෞශල්‍යා ආරියරත්න මෙනෙවිය
ගරු අජිත් පී. පෙරේරා මහතා
ගරු ඉම්රාන් මහරූෆ් මහතා
ගරු චමින්ද විජේසිරි මහතා
ගරු (වෛද්‍ය) නජිත් ඉන්දික මහතා
ගරු නීතිඥ සරත් කුමාර මහතා
ගරු (වෛද්‍ය) එස්. ශ්‍රී බවානන්දරාජා මහතා

පරිශිෂ්ටය

# අන්තර්ගතය


- පොදු  ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව — ඇමුණුම I
- රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව — ඇමුණුම II

ඇමුණුම **I**

**පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව**

**දැනට පවත්නා පාර්ලිමේන්තුවේ ස්ථාවර නියෝග 120(4) පළමුවැනි ඡේදයට ඉක්බිතිව ම මතු සඳහන් නව ඡේදය ඇතුළත් කිරීමට :—**

*"පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව වෙත විගණකාධිපතිවරයා විසින් ඉදිරිපත් කරනු ලබන වාර්තා පරීක්ෂා කිරීමේ දී බරපතල මූල්‍ය වංචා හෝ දූෂණ ක්‍රියාවන් සිදුව ඇති බවට කාරක සභාව නිගමනය කළහොත් ඒ සම්බන්ධයෙන් නීතිමය පියවර ගැනීම සඳහා එකී සිද්ධීන් සෘජුව අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාවට හෝ පොලිස්පතිවරයාට කාරක සභාව විසින් යොමු කරනු ලැබිය හැකි ය."*

උක්ත යෝජිත සංශෝධනය සලකා බැලූ කාරක සභාව, **පහත තද පැහැ අකුරින් මුද්‍රිත සංශෝධනයන් ද ඇතුළත්ව** දැනට පවත්නා පාර්ලිමේන්තුවේ ස්ථාවර නියෝග 120(4) හි පළමුවැනි ඡේදයට ඉක්බිතිව ම මතු සඳහන් සංශෝධිත නව ඡේදය ඇතුළත් කිරීමට එකඟතාවය පළ කරන ලදී:

*"පොදු ව්‍යාපාර පිළිබඳ කාරක සභාව වෙත විගණකාධිපතිවරයා විසින් ඉදිරිපත් කරනු ලබන වාර්තා පරීක්ෂා කිරීමේ දී බරපතල මූල්‍ය වංචා, **අල්ලස්** හෝ දූෂණ ක්‍රියාවන් සිදුව ඇති බවට කාරක සභාව නිගමනය කළහොත් **ඒ පිළිබඳ වාර්තාව පාර්ලිමේන්තුවේ සභාගත කළ පසු පාර්ලිමේන්තුව විසින් තීරණය කරනු ලබන අවස්ථාවකදී,** එකී සිද්ධීන් සම්බන්ධයෙන් **නිසි** පියවර ගැනීම සඳහා එකී සිද්ධීන් සෘජුව අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාවට හෝ පොලිස්පතිවරයාට කාරක සභාව විසින් යොමු කරනු ලැබිය හැකි ය."*

**ඇමුණුම II**

## රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව

**දැනට පවත්නා පාර්ලිමේන්තුවේ ස්ථාවර නියෝග 119(4) පළමුවැනි ඡේදයට ඉක්බිතිව ම මතු සඳහන් නව ඡේදය ඇතුළත් කිරීමට :—**

*"රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව වෙත විගණකාධිපතිවරයා විසින් ඉදිරිපත් කරනු ලබන වාර්තා පරීක්ෂා කිරීමේ දී බරපතල මූල්‍ය වංචා හෝ දූෂණ ක්‍රියාවන් සිදුව ඇති බවට කාරක සභාව නිගමනය කළහොත් ඒ සම්බන්ධයෙන් නීතිමය පියවර ගැනීම සඳහා එකී සිද්ධීන් සෘජුව අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාවට හෝ පොලිස්පතිවරයාට කාරක සභාව විසින් යොමු කරනු ලැබිය හැකි ය."*

උක්ත යෝජිත සංශෝධනය සලකා බැලූ කාරක සභාව, **පහත තද පැහැ අකුරින් මුද්‍රිත සංශෝධනයන් ද ඇතුළත් කර**, දැනට පවත්නා පාර්ලිමේන්තුවේ ස්ථාවර නියෝග 119(4) හි පළමුවැනි ඡේදයට ඉක්බිතිව ම මතු සඳහන් සංශෝධිත නව ඡේදය ඇතුළත් කිරීමට එකඟතාවය පළ කරන ලදී:

*"රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව වෙත විගණකාධිපතිවරයා විසින් ඉදිරිපත් කරනු ලබන වාර්තා පරීක්ෂා කිරීමේ දී බරපතල මූල්‍ය වංචා, **අල්ලස්** හෝ දූෂණ ක්‍රියාවන් සිදුව ඇති බවට කාරක සභාව නිගමනය කළහොත් **ඒ පිළිබඳ වාර්තාව පාර්ලිමේන්තුවේ සභාගත කළ පසු පාර්ලිමේන්තුව විසින් තීරණය කරනු ලබන අවස්ථාවකදී,** එකී සිද්ධීන් සම්බන්ධයෙන් **නිසි** පියවර ගැනීම සඳහා එකී සිද්ධීන් සෘජුව අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාවට හෝ පොලිස්පතිවරයාට කාරක සභාව විසින් යොමු කරනු ලැබිය හැකි ය."*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பத்தாவது பாராளுமன்றம்**
**(முதலாவது கூட்டத்தொடர்)**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 450**

# நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கை

**குழுவின் தவிசாளர்**

**சபாநாயகர், கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன**

**அவர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டது.**

இலங்கைப் பாராளுமன்றத்தால் 2026 பிப்ரவரி மாதம் 20 ஆந் திகதி அச்சிடப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் பதிப்பிக்கப்பட்டது.
கொழும்பு அரசாங்க வெளியீடுகள் அலுவலகத்தில் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

# அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் 2025 ஒக்டோபர் மாதம் 10 ஆந் திகதி முதல் தடவையாகக் கூடிய குழு, பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் (நி.க) மீதான திருத்தம் தொடர்பாக முறையே 2025 செப்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி மற்றும் 2025 ஒக்டோபர் 07ஆந் திகதிகளில் பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்திய முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு (நி.க 120) மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (நி.க. 119) இற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை (இணைப்பு I மற்றும் இணைப்பு II) இந்த அறிக்கை முன்வைக்கிறது.

காலாகாலத் தேவைகளைக் கவனத்திற்கொண்டு மேற்படி சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்களின் அடிப்படை குறிக்கோள்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றிக் கொள்ள அதன் விசாரணை நடவடிக்கைகளின் விளைத்திறன் முக்கியத்துவமிக்கது என்பதால், அதற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்ற காலத்தை குறைத்துக் கொள்ளுதல் அத்துடன் பாரதூமான நிதி மோசடி, ஊழல் அல்லது பொது மக்களின் பணம் விரயமாக்கப்பட்டுள்ளதாக குழுவினால் இனங்காணப்பட்டுள்ள சம்பவங்களை நேரடியாக தொடர்புடைய விசாரணை நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தும் சாத்தியத்தை ஏற்படுத்துதல் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு பூரண, துரித விசாரணைகளை நடாத்துவதற்கு சந்தர்ப்பமளித்தல் போன்றவை இத்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதன் அடிப்படை நோக்கங்களாகும்.

2025 ஒக்டோபர் மாதம் 10 ஆந் திகதி கூடிய குழுவினால் இந்த உத்தேச திருத்தங்கள், மேலும் சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டதுடன் 2025 டிசம்பர் மாதம் 18 ஆந் திகதி மற்றும் 2026 பிப்ரவரி மாதம் 17 ஆந் திகதி கூடிய குழுவினால், குழுவின் அறிக்கையை 2026 பிப்ரவரி மாதம் 20 ஆந் திகதி அதன் தவிசாளரும் சபாநாயகருமான கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களால் பாராளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

2. பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரிற்கான நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் கட்டமைப்பு

கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன, சபாநாயகர்(**தவிசாளர்**)

கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி, பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் தவிசாளர்

கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர, குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ
கௌரவ அனுர கருணாதிலக்க
கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன
கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன
கௌரவ அஜித் பி. பெரேரா
கௌரவ இம்ரான் மகரூப்
கௌரவ சமிந்த விஜேசிறி
கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க
கௌரவ சட்டத்தரணி சரத் குமார
கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

# உள்ளடக்கம்


- அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு — இணைப்பு I
- அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு — இணைப்பு II

**இணைப்பு I**

**அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு**

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) இன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு : —**

"கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்."

மேற்குறித்த உத்தேச திருத்தத்தினை பரிசீலனை செய்த குழு, **பின்வரும் தடித்த எழுத்துக்களில் பதிப்பிக்கப்பட்ட திருத்தங்களையும் உள்ளடக்கி** தற்போது நடைமுறையிலுள்ள பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 120(4) இன் முதலாவது பந்தியை உடனடுத்து பின்வரும் திருத்தப்பட்ட புதிய பந்தியை உட்புகுத்த இணக்கம் தெரிவித்தது:

"கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள், **இலஞ்சம்** அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, **அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சபையாவணப்படுத்திய பின்னர் பாராளுமன்றன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து,** அதற்கு **தேவையான** உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்."

**இணைப்பு II**

## அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு : —**

“கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.”

மேற்குறித்த உத்தேச திருத்தத்தினை பரிசீலனை செய்த குழு, **பின்வரும் தடித்த எழுத்துக்களில் பதிப்பிக்கப்பட்ட திருத்தங்களையும் உள்ளடக்கி** தற்போது நடைமுறையிலுள்ள பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 119(4) இன் முதலாவது பந்தியை உடனடுத்து பின்வரும் திருத்தப்பட்ட புதிய பந்தியை உட்புகுத்த இணக்கம் தெரிவித்தது:

“கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள்**, இலஞ்சம்** அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, **அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சபையாவணப்படுத்திய பின்னர் பாராளுமன்றன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவிடத்து,** அதற்கு **தேவையான** உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.”

The Tenth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka
(First Session)

Parliamentary Series No. 450

# REPORT
# OF
# THE COMMITTEE ON STANDING ORDERS

*Presented by*

**Hon. (Dr.) Jagath Wickramaratne, the Speaker**
Chairman of the Committee

Ordered by Parliament of Sri Lanka to be printed on 20 February 2026

Printed at the Department of Government Printing, Sri Lanka
To be purchased at the Government Publication Bureau, Colombo.

# Report

The Committee at its first meeting held on 10 October 2025, during the First Session of the Tenth Parliament, regarding the amendment of the Standing Orders (S.O.) of Parliament, this report presents the amendments to the Standing Orders of Parliament (as Annexure 1 and Annexure 11) to the Committee on Public Enterprises (S.O. 120) and the Committee on Public Accounts (S.O. 119), based on the proposals submitted to Parliament on 26 September and 07 October 2025, respectively.

In order to achieve the basic objectives of the Committees for Special Purposes in more efficient and effective manner and the effectiveness of its investigative activities, ensuring timely, direct referral to investigative bodies and seeking the ability to directly refer cases identified by the Committee where serious fraud, corruption, or waste of public funds to investigative agencies and to allow the relevant institutions to conduct a full, necessary and expeditious investigation, etc., were considered in the presentation of these amendments.

The Committee at its meeting held on 10 October 2025, approved these proposed amendments along with further amendments and the Committee, which was reconvened on 18 December 2025 and 17 February 2026 decided to present the report of the Committee on 20 February 2026 to Parliament by the Hon. (Dr.) Jagath Wickramaratne, the Speaker and the Chairman of the Committee.

2. Composition of Committee on Standing Orders for the First Session of the Tenth Parliament

Hon. (Dr.) Jagath Wickramaratne, the Speaker (**Chairman**)
Hon. (Dr.) Rizvie Salih, the Deputy Speaker and the Chairman of Committee
Hon. (Mrs.) Hemali Weerasekara, Deputy Chairperson of Committees
Hon. (Dr.) Nalinda Jayatissa
Hon. Anura Karunathilaka
Hon. (Dr.) Prasanna Gunasena
Hon. (Dr.) (Ms.) Kaushalya Ariyarathne
Hon. Ajith P. Perera
Hon. Imran Maharoof
Hon. Chaminda Wijesiri
Hon. (Dr.) Najith Indika
Hon. Sarath Kumara, Attorney at Law
Hon. (Dr.) S. Sri Bavanandarajah

**Appendix**

# CONTENTS


- Committee on Public Enterprises ANNEXURE I
- Committee on Public Accounts ANNEXURE II

**ANNEXURE I**

## COMMITTEE ON PUBLIC ENTERPRISES

**Following new paragraph be inserted immediately after the first paragraph of the existing Standing Order 120(4) of the Parliament :—**

*"If the Committee on Public Enterprises, in examining the reports presented to the Committee by the Auditor - General, comes to the conclusion that serious financial frauds or acts of corruption have occurred, the Committee may refer such matters directly to the Commission to Investigate Allegations of Bribery or Corruption or to the Inspector-General of Police for taking legal action regarding such matters."*

The Committee, having considered the above proposed amendment, agreed to insert the following new amended paragraph immediately after the first paragraph of the existing Standing Order of Parliament 120(4), also **including the amendments proposed by the Committee in bold letters below**:

*"If the Committee on Public Enterprises, in examining the reports presented to the Committee by the Auditor - General, comes to the conclusion that serious financial frauds, acts of* ***bribery*** *or corruption have occurred, the Committee may refer such matters directly to the Commission to Investigate Allegations of Bribery or Corruption or to the Inspector-General of Police,* ***at a time determined by Parliament after the report thereon has been tabled in Parliament****, for taking* ***necessary*** *action regarding such matters."*

**ANNEXURE II**

**COMMITTEE ON PUBLIC ACCOUNTS**

**Following new paragraph be inserted immediately after the first paragraph of the existing Standing Order 119(4) of the Parliament :—**

*"If the Committee on Public Accounts, in examining the reports presented to the Committee by the Auditor - General, comes to the conclusion that serious financial frauds or acts of corruption have occurred, the Committee may refer such matters directly to the Commission to Investigate Allegations of Bribery or Corruption or to the Inspector-General of Police for taking legal action regarding such matters."*

The Committee, having considered the above proposed amendment, agreed to insert the following new amended paragraph immediately after the first paragraph of the existing Standing Order of Parliament 119(4), also **including the amendments proposed by the Committee in bold letters below**:

*"If the Committee on Public Accounts, in examining the reports presented to the Committee by the Auditor - General, comes to the conclusion that serious financial frauds, acts of* ***bribery*** *or corruption have occurred, the Committee may refer such matters directly to the Commission to Investigate Allegations of Bribery or Corruption or to the Inspector-General of Police,* ***at a time determined by Parliament after the report thereon has been tabled in Parliament****, for taking* ***necessary*** *action regarding such matters."*